பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 03 திங்கட்கிழமை 17.03.2025 | அதிர்வு 226

## பஸ் விபத்தில் குழந்தை உட்பட 21 பேர் காயம்

புத்தளம், ஆராச்சிக்கட்டு, பத்துலு ஓயா பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் குழந்தை உட்பட 21 பேர் 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



உள்ளூராட்சி சபைகளில் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க

# தமிழரசுக் கட்சிக்கு ஆணை தாருங்கள்!

## கிளிநொச்சியில் சிறீதரன் எம்.பி. வேண்டுகோள்

(எஸ். நிதர்ஷன்)

“நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கத் தமிழ் மக்கள் ஆணை வழங்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இரண்டு பிரதேச சபைகளுக்குமான வேட்புமனுக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று தாக்கல் செய்தது. 05▶

# இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடி மீன்பிடியை வெளிப்படுத்தும் ஆவணப்படம்

## ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதற்காக கடற்றொழில் அமைச்சரிடம் கையளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவை மடி மீன்பிடியை வெளிப்படுத்தும் ஆவணப்படம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் ஒப்படைக்கப்படுவதற்காகக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் கையளிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் தயாரிக்கப்பட்ட குறித்த ஆவணப்படம் 05▶





# யாழ். மாநகர மேயர் வேட்பாளராக களமிறங்குகின்றார் கௌசல்யா!

## சுயேச்சைக் குழுவுக்கான கட்டுப்பணம் செலுத்தினார் அர்ச்சுனா எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா கட்டுப்பணம் செலுத்தினார்.

யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் இன்று அவர் கட்டுப்பணம் செலுத்தினார்.

இதன்போது அர்ச்சுனா எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,

“இந்தத் தேர்தலில் வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் சுயேச்சைக் குழுவாக போட்டியிடவுள்ளோம். இதற்கமைய யாழ்ப்பாணத்தில் உள்ள 5 உள்ளூராட்சி சபைகளுக்கு முதற்கட்டமாகக் கட்டுப்பணத்தைச் செலுத்தியிருக்கின்றோம்.

ஏனெனில் உள்ளூராட்சி சபைகளுக்கான கட்டுப்பணம் செலுத்துவதற்கு எம்மிடம் போதிய நிதி இல்லாததால் போட்டியிடும் வேட்பாளர்களிடமே அதற்கான நிதியை வழங்குமாறு கூடக் கேட்டிருக்கின்றோம்.

அவ்வாறு அவர்கள் வழங்குமிடத்தே அந்த நிதியை நாம் மீண்டும் அவர்களிடம் கொடுப்போம் என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்தும் இருக்கின்றோம். எமக்கான பணம் வந்த பின்னர் அந்த நிதியை நிச்சயம் அவர்களிடமே வழங்குவோம்.

இதனடிப்படையில் வடக்கு, கிழக்கு முழுவதும் உள்ள சபைகளுக்கு தொடர்ந்தும் நாம் கட்டுப்பணத்தைச் செலுத்தவுள்ளோம். இவ்வாறு அனைத்து சபைகளுக்கும் கட்டுப்பணத்தைச் செலுத்தி சகல இடங்களிலும் தேர்தலில் போட்டியிடுவோம்.




இதேவேளை, யாழ். மாநகர சபையின் மேயர் வேட்பாளராக எனது செயலாளர் சட்டத்தரணி கௌசல்யாவை நிறுத்தவுள்ளோம். எங்களிடம் ஒழித்து மறைக்கும் எண்ணமோ, சிந்தனையோ இல்லை.

ஆகவே, வடக்கு, கிழக்கில் சகல சபைகளிலும் நாம் போட்டியிடுகின்ற போது தமது முழுமையான ஆதரவை மக்கள் வழங்க வேண்டும். அவ்வாறாக மக்கள் தமது ஆதரவை எமக்கு வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.” – என்றார்.

# மொட்டுக் கட்சியும் கட்டுப்பணம்

(எஸ்.நிதர்ஷன்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்குக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

பெரமுனவின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் கீத்நாத் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் இன்று காலை கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார்.

யாழ். மாநகர சபை மற்றும் பருத்தித்துறை நகர சபை ஆகிய இரண்டு சபைகளில் மட்டுமே இம்முறை போட்டியிடவுள்ளது என்று அமைப்பாளர் கீத்நாத் தெரிவித்துள்ளார்.



இந்த முறை நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைதியாக நடைபெற கட்சி சார்பில் எங்களுடைய முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என்றும் அவர் கூறியுள்ளார்.



# 3,492 போதை மாத்திரைகளுடன் காத்தான்குடியில் ஒருவர் கைது!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, காத்தான்குடி, காங்கேயன்னோடை பகுதியில் 3 ஆயிரத்து 492 போதை மாத்திரைகளுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பதூர்பள்ளி வீதியில் உள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார், சட்டவிரோதமாக வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரத்து 492 போதை மாத்திரைகளைக் கைப்பற்றியதுடன் 36 வயதுடைய ஒருவரையும் கைது செய்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா புதன்று ஆரம்பம்!

## 4 நாள்கள் 13 அமர்வுகளில் மூவாயிரத்து 920 பேருக்குப் பட்டங்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன் கிழமை முதல் 22ஆம் திகதி சனிக் கிழமை வரை – நான்கு நாள்கள் 13 அமர்வுகளாகப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழா தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக விவரிப்பு துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போது பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும் கலைப்பீடாதிபதியுமான பேராசிரியர் சி. ரகுராம் பட்டமளிப்பு விழா பற்றிய விவரங்களை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அதன் முழு விவரமும் வருமாறு:

வருடாந்தம் நடைபெறும் யாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்தின்பட்டமளிப்பு வைபவமானது, பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் மிகவும் முக்கியமானதாக அமைவதுடன், ஒவ்வொரு பட்டதாரியினதும் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாகவும் இடம்பிடிக்கின்றது. இந்தப் பட்டமளிப்பு விழாவானது யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டு பொன் விழா ஆண்டு நிறைவில் இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

39ஆவது பட்டமளிப்பு விழாவுக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிப்பார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்ப பீடம், இந்துக் கற்கைகள் பீடம், சித்த மருத்துவ பீடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முன்னை நாள் வவுனியா வளாகத்தைச் (தற்போது வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் வழங்கப் படவுள்ளதுடன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில், திறந்த மற்றும் தொலைக்கல்வி முறைமை மூலம் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப் படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 399 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 686 உள்வாரி மாணவர்களுக்கும், 702 திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 133 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 399 மாணவர்கள் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை நான்கு மாணவர்களும், முது மெய்யியல் மாணிப் பட்டத்தை 11 மாணவர்களும், தமிழில் முதுமாணிப்பட்டத்தை 22 மாணவர்களும், சைவசித்தாந்தத்தில் முதுமாணிப்பட்டத்தை மூன்று

மாணவர்களும், கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப்பட்டத்தை 38 மாணவர்களும், தூய சக்தித் தொழில் நுட்பங்களில் முதுமாணிப் பட்டத்தை ஒரு மாணவரும், கல்வியியலில் முதுமாணிப்பட்டத்தை 176 மாணவர்களும், பொது நிர்வாகத்தில் முதுமாணிப்பட்டத்தை 70 மாணவர்களும், கல்வியில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 54 மாணவர்களும், பிராந்தியத் திட்டமிடலில் முதுமாணிப்பட்டத்தை 17 மாணவர்களும், தமிழில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை ஒரு மாணவரும் பெறவிருப்பதுடன் வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை இரண்டு மாணவர்களும் பெறுகின்றனர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 147 மாணவர்கள் மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணிப் பட்டத்தையும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 177 மாணவர்கள் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான மாணிப் பட்டத்தையும், விவசாய பீடத்தைச் சேர்ந்த 110 மாணவர்கள் விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 84 மாணவர்கள் பொறியியலில் சிறப்பு தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், 91 மாணவர்கள் உயிர்முறைமைகளில் சிறப்பு தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், சித்தமருத்துவ பீடத்தில் இருந்து 60 மாணவர்கள் சித்த மருத்துவ சத்திரசிகிச்சைமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தில் இருந்து மருந்தகவியல் சிறப்புமாணிப் பட்டத்தை 39 மாணவர்களும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான மாணிப் பட்டத்தை 52 மாணவர்களும், தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 38 மாணவர்களும் பெறவிருக்கின்றனர்.

அத்துடன், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து சிறப்பு வியாபார நிர்வாகமாணிப் பட்டத்தை 267 மாணவர்களும், வியாபார நிர்வாகமாணிப் (பொது) பட்டத்தை 13 மாணவர்களும், சிறப்பு வணிகமாணிப் பட்டத்தை 83 மாணவர்களும், வணிக மாணிப் (பொது) பட்டத்தை மூன்று மாணவர்களும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன், கலைப்பீடத்தில் இருந்து சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 276 மாணவர்களும், பொதுக் கலைமாணிப் பட்டத்தை 353 மாணவர்களும், மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலை மாணிப் பட்டத்தை 22 மாணவர்களும், சட்டமாணியில் சிறப்புப் பட்டத்தை 69 மாணவர்களும் பெறவிருக்கின்றனர்.

மேலும், சேர். பொன் இராமநாதன் ஆற்றுகைகள், காண்பியக் கலைகள் பீடத்தைச் சேர்ந்த 158 மாணவர்கள் நடனம், இசை மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் துறைகளில் நுண்கலை மாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர்.

மேலும், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 36 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞான மாணிப் பட்டத்தையும், 30 மாணவர்கள் கணனி விஞ்ஞானத்தில் சிறப்பு

தொடர்ச்சி ▼

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா புதன்று ஆரம்பம்!

தொடர்ச்சி▲

விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 57 மாணவர்கள் சுற்றுச் சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமாணிப் பட்டத்தை இரண்டு மாணவர்களும், தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தை 106 மாணவர்களும், பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞான மாணி பட்டத்தை 56 மாணவர்களும் பெறவிருக்கின்றனர்.

வியாபாரக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 57 மாணவர்கள் கணக்கியலும், நிதியியலிலும் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 13 மாணவர்கள் வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவ மாணிப் பட்டத்தையும், 32 மாணவர்கள் மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 12 மாணவர்கள் சந்தைப் படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 34 மாணவர்கள் வியாபார முகாமைத்துவமாணி (பொது)ப் பட்டத்தையும், 67 மாணவர்கள் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், ஒன்பது மாணவர்கள் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன், தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தில் இருந்து 110 மாணவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தையும் பெறுகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் தொலைதூரக் கற்கைகள் முறைமை மூலம் பட்டக் கற்கைகளைப் பூர்த்தி செய்த 514 மாணவர்கள் கலைமாணி பட்டத்தையும், 76 மாணவர்கள் சிறப்பு வணிகமாணிப் பட்டத்தையும், 26 மாணவர்கள் வணிகமாணிப்பட்டத்தையும், 86 மாணவர்கள் வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளதுடன், 90 மாணவர்கள் உடற்கல்வியில் உயர் தகமைச் சான்றிதழ்களையும், 37 மாணவர்கள் தொழில்சார் ஆங்கிலத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் உயர் தகமைச் சான்றிதழை ஒரு மாணவரும், வியாபார முகாமைத்துவத்தில் மூன்று மாணவர்கள் உயர் தகமைச் சான்றிதழ்களையும், வணிகத்தில் தகமைச் சான்றிதழை ஒரு மாணவரும் பெற இருப்பதுடன், வியாபார முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழை ஒரு மாணவரும் பெறுவது உறுதிப்படுத்தப்படவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 68 தங்கப் பதக்கங்களும், 57 பரிசில்களும், நான்கு புலமைப்பரிசில்களும், வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வருடமும் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கங்களை முறையே 2020 ஆம் கல்வியாண்டு பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து கலைப்பீடத்தைச் சேர்ந்த ஒரு மாணவரும், 2021 ஆம் கல்வியாண்டுக்குரிய தங்கப்பதக்கத்தை பீடமட்டத்தில் கலைப்பீடத்தில் இருந்து ஒரு மாணவரும், மருத்துவ பீடத்தில் இருந்து ஒரு மாணவரும் பெறுவதுடன், 2022 ஆம் கல்வியாண்டுக்குரிய தங்கப்பதக்கத்தை பீடமட்டத்தில் முகாமைத்துக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து ஒரு மாணவரும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒரு மாணவரும் பெறுகின்றனர்.

மேலும், தூய மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் சிறந்த செயலாற்றுகைக்கான பேராசிரியர் கந்தையா குணரட்ணம் தங்கப் பதக்கத்தை பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒரு மாணவரும் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பட்டமளிப்பு வைபவத்துக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் நிகழ்வுகளாக அமையும் நினைவுப் பேருரைகளான சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரை பங்குனி மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரை பிற்பகல் 4 மணிக்கும் கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவிருக்கின்றன.

சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும்தகைசால் பேராசிரியருமான பொ.பால சுந்தரம்பிள்ளை, "இலங்கை, வடமாகாணத்தில் குடித்தொகை வேறுபாட்டு ஒழுங்கும், இடஞ்சார் பரம்பல் மாற்றங்களும் 1871 - 2022 (The Population Variations Pattern and Spatial Distributional Changes in the Northern Province of Sri Lanka - 1871-2022)" என்ற தலைப்பிலும், மதிப்புமிகு சீமாட்டி லீலாவதி இராம நாதன் நினைவுப் பேருரையை கொழும்புப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி. டர்சி தொறடெனியா, "பெண்கள் ஆரோக்கியத்தின் முன்னோடி கலாநிதி சிவா சின்னத்தம்பி (Pioneer in Women's Health Dr.Siva Chinnatamby)" என்ற ஆய்வுத் தலைப்பிலும் நிகழ்த்தவிருக்கின்றனர்.

## யாழில் உள்ளூராட்சி சபைகளில் சுயேச்சைக்குழுவை களமிறக்கிய சுலக்சன்

(எஸ்.நிதர்ஷன்)

தொழிலதிபர் சுலக்சன் யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் சுயேச்சைக்குழுவைக் களமிறக்கியுள்ளார்.

இந்தச் சுயேச்சைக் குழுக்களுக்கு யாழ். தேர்தல் திணைக்கள அலுவலகத்தில் இன்று கட்டுப்பணத்தை அவர் செலுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ். மாநகர சபை, கோப்பாய் பிரதேச சபை, வேலணை பிரதேச சபை ஆகிய மூன்று உள்ளூராட்சி சபைகளில் மட்டுமே சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதற்குக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழரசுக் கட்சிக்கு...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. தலைமையில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், முன்னாள் தவிசாளர்களான அருணாசலம் வேழமாலிகிதன், சுப்பிரமணியம் சுரேன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை உறுப்பினர்களின் பங்கேற்போடு, இரண்டு சபைகளுக்குமான வேட்புமனுக்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இன்று நண்பகல் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் சிறீதரன் எம்.பி. ஊடகங்களிடம் கருத்துரைத்தார்.











## பஸ் விபத்தில்...

காயமடைந்துள்ளனர் என்று ஆராச்சிக்கட்டு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த கடை மற்றும் மரம் ஒன்றின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நிக்கவெரட்டியவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில், பஸ்ஸில் பயணித்த பயணிகள் மற்றும் கடையில் இருந்த குழந்தை உட்பட 21 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் சிலாபம் மற்றும் முந்தல் ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிக்கட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய மீனவர்களின்...

இன்று யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் கடற்றொழில் அமைச்சரிடம் கடற்றொழில் அமைப்பின் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடி மீன்பிடியால் கடல் வளங்கள் பாதிக்கப்படுவதுடன் பல இலட்சக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்டத்தில் போட்டியிட ஐக்கிய மக்கள் சக்தி கட்டுப்பணம்

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி இன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 17 சபைகளிலும் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தி, யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள அலுவலகத்தில் இந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

இந்தக் கட்டுப்பணத்தைக் கட்சியின் பிரதிச் செயலாளரும் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளருமான உமாச்சந்திரா பிரகாஸ் இன்று காலை செலுத்தியுள்ளார்.

இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

எமது கட்சியின் தலைவர் மீது எமது மக்கள் கொண்ட நம்பிக்கை அதிகமாகவே இருக்கின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட இங்குள்ள மக்கள் அமோக ஆதரவைக் கொடுத்திருந்தார்கள்.

இந்த முறை கணிசமான ஆதரவைப் பெறக் கூடிய நம்பிக்கையோடு இளம் வேட்பாளர்களை நிறுத்தி இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளடங்களாக இலங்கை முழுவதும் உள்ள சகல சபைகளிலும் நாங்கள் போட்டி போடுகின்றோம். மக்களின் ஆதரவுடன் வெற்றிகளையும் பெற்றுக்கொள்வோம்.” – என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கர்த்தினாலின் செக் - மேட்!

எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டு, நீண்ட காலம் வாய்ச்சவடால் அரசியல் செய்த ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தி இப்போது அதிகாரம் கைகளுக்கு வந்த பின்னர் - ஆட்சிக் கயிறு தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு - முன்னர் வாய்வீச்சால் வெட்டிப் பிடுங்கிய விடயங்களை செயலில் சாதிக்க முடியாது தடுமாறி அல்லாடுகின்றது.

அதிகாரத்துக்கு வர முன்னர் தேசிய மக்கள் சக்தி கொடுத்த எல்லா வாக்குறுதிகளும் காற்றில் பறக்கும் நிலைமையில் இருப்பது இப்போது வெளிப்படையானது.

எதிரணியில் இருந்து கொண்டு கண்மூடித்தனமாக விமர்சிப்பது வேறு, ஆட்சி அதிகாரத்தைக் கையாண்டு விடயங்களைக் கொண்டு நடத்துவது வேறு என்பது இப்போது ஜே.வி.பி. தரப்புக்கும் நன்கு புரியத் தொடங்கியிருக்கும் என நம்பலாம்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தொடர்க் குண்டு தாக்குதல்களுக்கு நியாயம் தேடி - நீதியை நாடி - மைத்திரிபால சிறிசேன அரசு, கோட்டாபய ராஜபக்ஷ அரசு, ரணில் அரசு என்று எல்லோர் பின்னாலும் போன கத்தோலிக்க திருச்சபை இப்போது தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அநுரா குமார திஸநாயக்கா மீது அதீத நம்பிக்கை வைத்து பல எதிர்பார்ப்புகளை வெளியிட்டு நின்றது.

ஆனால், சிறுபான்மை மதத்தினருக்கு - சிறுபான்மை இனத்தினருக்கு - நீதி செய்வதில் தென்னிலங்கை எத்தகைய போக்குடையது என்பதை தமிழர்கள் விடயத்தில் கண்டுர்ணத் தவறிய கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித், அரசின் மீது நம்பிக்கை வைத்து நீதி கிட்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

அநுரா குமார திஸநாயக்காவின் வருகையோடு இந்த பேரழிவுக்கு நீதி, நியாயம் கிட்டும் என்று அவர் கொண்டிருந்த நம்பிக்கை இப்போது மண்ணாகத் தொடங்கி இருப்பது அவருக்கே புரிய ஆரம்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல்களின் நினைவு தினம் ஏப்ரல் 21 வருகின்றது. அதற்கு முன்னர் அநுர அரசு இவ்விடயத்தில் காத்திரமான நடவடிக்கை எடுக்காவிட்டால் கத்தோலிக்க திருச்சபை குறிப்பிடத்தக்க பதிலடி நடவடிக்கை எதனையும் எடுக்கக் கூடும் என்பது கர்த்தினால் மல்கம் ரஞ்சித்தின் தற்போதைய அறிவிப்பு மூலம் வெளிப்பட்டிருக்கின்றது.

வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் இது விடயத்தில் அரசு காத்திரமான பிரதிபலிப்பைக் காட்டாமல் விட்டால் - மே முதல் வாரத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடப்பதற்கு முன்னர் - இந்த ஆட்சி பீடத்திற்கு எதிராக கத்தோலிக்க திருச்சபை உரு கொண்டு நிற்கும் என்பது கத்தோலிக்க ஆயரின் தற்போதைய அறிவிப்பின் மூலம் உறுதியாகி உள்ளது.

"நாங்கள் அரசிடம் அதிகாரத்தை ஒப்படைத்துள்ளோம். இப்போது, அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவது, சரியான விசாரணை நடத்துவது, தேவையான விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை அறிமுகப்படுத்துவது மற்றும் தேவைப்பட்டால் அவற்றைத் திருத்துவது அவர்களின் பொறுப்பு.

நீதி மற்றும் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதை மறைக்கவோ அல்லது அரசியல் ஒப்பந்தங்கள் மூலம் சமரசம் செய்யவோ கூடாது. உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு நீதி வழங்குவதாக, குறிப்பாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கட்டுவாப்பிட்டியில் உள்ள புனித செபாஸ்டியன் தேவாலயத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய நேரம் இது. நீதி தாமதிக்கப்படாது என்று அவர்கள் எங்களுக்கு உறுதியளித்தனர். இப்போது, அவர்கள் தங்கள் வார்த்தையின் படி செயல்பட வேண்டும். சுமார் ஒரு மாதத்தில், தாக்குதல்கள் இடம் பெற்று ஆறாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவோம். அதற்கு முன்னர் எங்களுக்கு நியாயமான பதில் கிடைத்தால், அதை நாங்கள் வரவேற்போம். ஆனால் இல்லையென்றால், மீண்டும் ஒருமுறை வீதிகளில் இறங்க வேண்டியிருக்கும்" - என்று கர்த்தினால் தெரிவித்திருக்கின்றார்.

அநுர அரசுக்கு செக் - மேட் வைத்திருக்கின்றார் கர்த்தினால்!





யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின்

# கருவள சிகிச்சை ஆய்வுகூட தொழில்நுட்ப உதவியாளர் இரண்டாவது மாணவர் அணி!

உலகம் முழுவதும் காணப்படும் மகப்பேற்று மற்றும் குழந்தை பிறப்பின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் கருவள சிகிச்சை ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்கும் முகமாக பலவாறான சவால்களைக் கடந்து இலங்கையின் மீண்டும் ஒரு முன்மாதிரியானதாக யாழ். பல்கலைக் கழகம் வெற்றியடைந்துள்ளது.

விசேடமாக வடக்கு, கிழக்கில் இருக்கும் தமிழர்களின் பிறப்பு வீதத்தில் காணப்படுகின்ற குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாகவும் வறிய குடும்பங்களில் காணப்படும் இவ்வாறான சமூக பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக பலவாறான சவால்களைக் கடந்து ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் இந்த பல்கலைக்கழக கல்வியில் இரண்டாவது மாணவர் அணியினர் வெளியேறியுள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பேராசிரியர்கள் சு.சுரேந்திரகுமரன், த.ரோபின்சன் , உடன் மகப்பேற்று வைத்திய நிபுணர்கள் எஸ்.ரகுராமன், பி. பாலகோபி, த. கஜேந்திரன், N. சரவணபவ ஆகியோர் கலந்து கொண்டனர்.

# குடிசார் அமைப்புக்களின் சம்மேளனங்களால் மகளிர் விவகார அமைச்சரிடம் ஐந்து கோரிக்கைகள்!

(த.சுபேசன்)

வடக்கு மாகாண குடிசார் அமைப்புக்களுடைய சம்மேளனங்களால் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜிடம் ஐந்து கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வின் போதே மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அமைச்சரிடம் கையளித்திருந்தனர்.

குடிசார் அமைப்புக்களின் சம்மேளனங்கள் அமைச்சரிடம் கையளித்த மகஜரில்,

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்களுடைய ஒன்றியத்தை நிறுவன ரீதியாக மேம்படுத்துவதுடன் அரசியலில் போதுமான பெண்கள் பிரதிநிதித்துவத்தைஉறுதி செய்ய வேண்டும். அத்துடன் கட்சிகளின் மத்திய மற்றும் நிர்வாகக் குழுக்களில் பெண்களை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப் போக்குவரத்தின் போது பெண்களுடைய பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பஸ் மற்றும் ரயில் பயணம் செய்யும் பெண்களில்



90 சதவிகிதமான பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இவ்வாறான பாலியல் ரீதியான துன்புறுத்தல்களைக் குறைப்பதற்கு போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்கு பால்நிலை அடிப்படையிலான பயிற்சிகளை வழங்க வேண்டும்.

பெண்களுடைய பொருளாதார வளங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாகச் சில கடன் உதவிகளின் போது ஆண்களின் ஒப்புதல் தேவைப்படுகிறது.அவ்வாறான சில விதிமுறைகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தடுத்து நீதி அணுகலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் பேசும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை அதிகரிக்க வேண்டும்.

மேலும் கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு இல்லங்களை நிறுவ வேண்டும். அத்துடன் வன்முறைகளுக்கு முகம் பெண்களுக்கு இலவச சட்ட உதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இரண்டு வயதுக் குழந்தைகளை வேறு நபர்களின் பராமரிப்பில் விட்டு விட்டு தாய்மார்கள் தொழில் தேடி வெளிநாடு செல்வதால் குழந்தைகள் பல்வேறு வகையான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அனுமதியை 2 வயதில் இருந்து 5 வயதாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.அதனை விட முக்கியமாக நாட்டுக்குள்ளேயே சிறந்த வருமானத்தை ஈட்டக்கூடிய வருமான வழிமுறைகளைப் பெண்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து புலம்பெயர்வைக் கட்டுப்படுத்தி குழந்தைகளின் நலனைப் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றுள்ளது.

மகஜரை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த குடிசார் அமைப்புக்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசு நெல் நிர்ணய விலையை அறிவிக்குக!

## அம்பாறை நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நெல்லின் நிர்ணய விலையை அரசு அறிவிக்க வேண்டும் என்று அம்பாறை நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் அவர் உரையாற்றுகையில்,

நமது நாட்டில் முக்கியமான துறையான விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை அபிவிருத்தி துறைக்கான குழுநிலை விவாத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த காலம் ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் நமது நாட்டு விசாயிகளுக்கு எதிராக செயற்பட்ட காரணங்களால் ஆட்சியிலிருந்து மாற்றப்பட்ட வரலாற்றை நாம் கண்டு கொண்டோம். எனவே, புதிய அரசு எமது நாட்டில் வாழும் விவசாயிகளுக்கான நல்ல விடயங்களைச் செயற்படுத்த வேண்டும்.

இன்று சபையில் உரையாற்றிய பிரதி அமைச்சர் நாமல் குமார, நமது நாட்டில் நெல்லின் விலையை உச்ச விலைக்கு கொண்டு வந்ததாக தெரிவித்தார். அதற்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அறுவடை நடைபெற்ற போது அரசு நெல்லின் உத்தரவாத விலையை அறிவிக்கவில்லை. இதனால் வடக்கு, கிழக்கு மாகாண விவசாயிகள் நஷ்டத்தை எதிர்நோக்கினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த மகாபோகம் நெல் அறுவடை முடிந்த வேளையில் நெல்லுக்கான நிர்ணய விலையை அரசு அறிவித்தது. இதனால் குறிப்பாக அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. குறைந்த விலையில் நெல்லை விற்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. எனவே எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அறுவடை நடைபெறுவதற்கு முன் நெல்லின் உத்தரவாத விலையை அரசு அறிவிக்க வேண்டும்.

இது விடயமாக விவசாய, நீர்ப்பாசன, காணி, கால்நடை அமைச்சர் லால்காந்த பதிலளிக்கையில்,

நெல்லின் உத்தரவாத விலையை அரசு அறிவிப்பதற்கு முன் அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஒரு கிலோ நெல்லின் விலை 140 ரூபாவுக்கு விவசாயிகள் விற்பனை செய்தனர். இந்த விலை குறைந்து விடக்கூடாது என்பதற்காகவே அரசு ஒரு கிலோ நெல்லுக்கு 120 ரூபா விலையை அறிவித்தது என்றார்.

எமது பிரதேசத்தில் விவசாயிகள் குறைந்த விலையில் நெல்லை



விற்றனர். தேவையெனில் எமது பிரதேச விவசாயிகளை உங்களிடம் அழைத்து வருகின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை குறித்த அமைச்சருக்கு பதிலளித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் ஆமவெட்டுவான், வேகாமம், துக்வெல, கச்சிக்கொடி தீவு, தாராம்பளை, கிரான்கோவை பிரதேசங்களில் அமைந்துள்ள விவசாயிகளின் காணிகளுக்குள் 30 வருட வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற யுத்த சூழ்நிலையில் விவசாயிகளால் தங்களின் காணிகளுக்குள் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. கடந்த அரசாங்கமும் ரணில் விக்கிரமசிங்கவும் பொத்துவில் பிரதேச விவசாயிகளின் விவசாய காணிகளை விடுவித்துத் தருவதாக வாக்குறுதி வழங்கி வாக்குகளை பெற்று ஏமாற்றிவிட்டனர்.

எனவே, புதிய அரசு உண்மையான விவசாயம் செய்யப்பட்ட காணிகளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இது போன்று தான் வட்டமடு காணி பிரச்சினையும் நீண்ட காலமாக தீர்வு கிடைக்காமல் உள்ளது. வட்டமடு பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் விவசாயிகள் உள்ளனர். அதேபோல் கால்நடை உரிமையாளர்கள் தமிழ் முஸ்லீம் மக்கள் உள்ளனர். தமிழ் முஸ்லீம் மக்களுடன் பேச்சு மேற்கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டும்.

அண்மையில் அம்பாறை மாவட்ட அரச அதிபரால் வட்டமடு பிரதேசத்தில் முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமான 300 ஏக்கர் காணிகளை விவசாயம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு, பின்னர் இடைநிறுத்தப்பட்டது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, வட்டமடு காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகளை விவசாய அமைச்சு மேற்கொள்ள வேண்டும். கடந்த அரசு மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இழுத்தடிப்பு செய்ததுடன் விவசாயிகளையும் ஏமாற்றியுள்ளது. எனவே, புதிதாக ஆட்சியைப் பொறுப்பெடுத்த நீங்களும் காலம் தாழ்த்தாது விவசாயிகளின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டும்.

இன்று நாடாளுமன்றத்தில் ஒரு முக்கியமான விடயத்தினை நான் தெரிவிக்க விரும்புகின்றேன், நாடாளுமன்றத்தின் கௌரவத்தை ஆளும்கட்சி, எதிர்க்கட்சி எல்லோரும் ஒன்றிணைந்து பாதுகாக்க வேண்டும். கடந்த அரசில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த 225 பேரையும் மக்கள் நிராகரிப்பதாக தெரிவித்தனர் என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

கடந்த அரசு காலத்தில் நமது நாட்டில் இனவாதம் விதைக்கப்பட்ட நிலையில் இருந்தது. நாடாளுமன்றத்தில் இனவாத செயற்பாடுகள் குறைந்த நிலையில் இருந்தன. இன்று நமது நாட்டில் இனவாதச் செயற்பாடுகள் குறைந்துள்ளன. ஆனால், நாடாளுமன்றத்தில் இனவாதச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பது குறித்து நாம் எல்லோரும் கவலைப்பட வேண்டும்.

குறிப்பாக முஸ்லிம் சமூகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக கூச்சம் இல்லாமல் இனவாத கருத்துக்கள் தொடர்ச்சியாக விதைக்கப்படுகின்றன.

பாராளுமன்ற சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், சபைக்கு தலைமை தாங்கும் தவிசாளர்கள் பாராளுமன்றத்தில் இனவாத கருத்துக்கள் தெரிவிப்பதை அனுமதிக்க கூடாது.

ஆளுங்கட்சியில் உள்ள அமைச்சர் ஒருவர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பார்த்து நாய் என்று கூறும் நிலைமையும், எதிர்க்கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரை கரடி என்று பேசுவதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கௌரவம் இல்லாத செயற்பாடுகள் ஆகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். 'சிஸ்டம் சேஞ்' எனக் கூறி ஆட்சிக்கு வந்த அரசின் காலத்தில் நாடாளுமன்றத்துக்குள் இனவாத கருத்துக்கள் தடை செய்யப்பட வேண்டும்.

இப்புதிய நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சியின் பெரும்பான்மையான புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்விமான்களாகவும், எதிர்க்கட்சியில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்விமான்களாகவும், அனுபவம் நிறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ள நிலையில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு அனுமதி அளிக்கக்கூடாது. இல்லையெனில் இனவாதத்துக்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்குவதாக அமையும்.- என்றார்.



# மனாரியன்ஸ் விங்ஸ் 06 அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டமும் இப்தாரும்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை மனாரியன்ஸ் விங்ஸ் 06 சமூக சேவைகள் அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டமும் இப்தார் நிகழ்வும் அமைப்பின் முன்னாள் செயலாளர் ஏ.எம்.றஜாத் தலைமையில், மருதமுனையில் இடம்பெற்றது.

இதன்போது, கடந்தாண்டு நிறைவு கூட்டறிக்கை மற்றும் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதோடு 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக தெரிவும் இடம்பெற்றது.

சமூகசேவை அமைப்பில் 15 வருடநிறைவைக் கொண்ட மனாரியன்ஸ் விங்ஸ் 06 சமூக சேவைகள் அமைப்பின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் – ஏ.எம்.வசீம், செயலாளர் – ஏ.ஆர் .நிஸ்பாக் அஹமட், உபதவைர் – எம்.ஐ.எம்.முனீப், உப செயலாளர் – எஸ்.எச்.எம்.ஜெளசி, பொருளாளர் – ஏ.ஆர் . பர்ஹதுள்ளாஹ், கணக்காய்வாளர் – எம் .ஜென்சீர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். உயர்பீட உறுப்பினர்களாக என்.எம்.சமீர், ஏ.ஆர்.எம்.பயாஸ், கே.எம்.றினோஸ், ஏ.ஆர்.எம்.அனஸ், எம் .ஜிஸான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் ஊடகம் – எம்.டப்ளியு.எம்.சாஜத், விளையாட்டு –எம்.ஜெ.அப்ஸான், மருத்துவம் – எம்.றிஸ்வான் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.







# ஜெயவதியின் ‘எழுத்துகளோடு பேசுகிறேன்’ கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா!

(பழுவூரான்)

கவிமகள் ஜெயவதியின் “எழுத்துகளோடு பேசுகிறேன்” கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புரவலர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவப் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி முதன்மை விருந்தினராகவும், மகரகம தேசிய கல்வி நிறுவக தமிழ்த் துறைப் பணிப்பாளர் கலாநிதி முருகு. தயாநிதி, மட்டக்களப்பு உயர் தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் செல்வரெத்தினம் ஜெயபாலன், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அழகையா விமலராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிக்கொணரும் வகையில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், தமிழ்மொழி வாழ்த்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு நிருத்திய கலாலய மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நூல் அறிமுகவுரையைக் கதிரவன் கலைக்கழகத் தலைவர் கதிரவன் தங்கராசா இன்பராசாவும் நயப்புரையை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக முதுநிலை விரிவுரையாளர் க.மோகனதாசனும் ஏற்புரையை நூலாசிரியர் கவிமகள் ஜெயவதியும் நன்றியுரையை சுகுணதாஸ் சசிகுமாரும் நிகழ்த்தினர்.

நிகழ்ச்சிகளை தமிழ்மகள் அனு சதுர்த்திகா தொகுத்து வழங்கினார்.








# மன்னார் மறைமாவட்ட புதிய குரு முதல்வராக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் நியமனம்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குரு முதல்வராக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை இந்த நியமனத்தை வழங்கினார்.

மடு திருப்பதியில் ஐந்து நாள்கள் நடைபெற்ற மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானத்தின் நிறைவில் வெள்ளிக்கிழமை (14) இந்த நியமனம் அறிவிக்கப்பட்டது.

ஒரு மறை மாவட்டத்தில் குரு முதல்வர் பதவி என்பது மறைமாவட்ட ஆயருக்கு அடுத்த நிலையில் உள்ள உயர் பதவியாகும்.

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக நியமிக்கப்பட்டுள்ள அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் மன்னார் மாவட்டத்தின் முருங்கன் கிராமத்தில் காலம்சென்ற திரு. திருமதி சந்தான் பாவிலு தம்பதியருக்கு பதினொராவது மகனாக 1969 ஆம் ஆண்டு பிறந்தார்.

முருங்கன் மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும், யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் தனது உயர்தரக் கல்வியையும் கற்றார்.

யாழ்ப்பாணம் புனித மாட்டினார் சிறிய குருமடத்தில் தனது ஆரம்ப குருத்துவ உருவாக்கத்தைப் பெற்ற இவர், தனது மூன்று வருட மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும், நான்கு வருட இறையியல் கல்வியை கொழும்புத்துறை



புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் கற்றார்.

1997ஆம் ஆண்டு அன்றைய மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையால் மன்னார் மறை மாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

வங்காலை, மன்னார் ஆகிய பங்குகளில் உதவி பங்குத் தந்தையாகவும், தலை மன்னாரில் பங்குத் தந்தையாக மூன்று வருடங்களும் பணியாற்றினார்.

தொடர்ந்து மன்னார் மறை கல்வி இயக்குனராக ஐந்து வருடங்களும், கலையருவி எனப்படும் சமூகத்தொடர்பாடல் அருட்பணி மைய இயக்குனராக ஏழு வருடங்களும், மன்னார் மறை மாவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் சர்வமத உரையாடல் ஆணைக்குழுவின் இயக்குனராக ஒன்பது வருடங்களும், 'மன்னா' என்ற மறைமாவட்டப் பத்திரிகையின் ஆசிரியராக 16 வருடங்களும், மன்னார் சிறிய குருமட அதிபராக ஐந்து வருடங்களும், மன்னார் மறைமாவட்ட செனட் சபையின் செயலாளராக ஐந்து வருடங்களும் பணியாற்றினார்.

தற்போது தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி திருத்தலத்தின் பரிபாலகராகவும், தோட்டவெளி பங்கு தந்தையாகவும், மன்னார் மறைக்கோட்ட முதல்வராகவும் பணியாற்றிக்கொண்டிருந்த நிலையில் இந்தப் புதிய பணிப்பொறுப்பு அடிகளாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ரோமாபுரியில் உள்ள ஊர் பானியா பல்கலைக்கழகத்தில் மெய்யியல் மாணிப் பட்டத்தையும் இறையியல் மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் எம். ஏ. பட்டத்தையும் கிறிஸ்தவ நாகரீகத்தில் எம். பில். பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தற்போது கண்டி பெரதெனியா பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் கலாநிதிப் பட்டத்தை நிறைவு செய்யும் நிலையில் உள்ளார்.

சிறந்த தமிழ் அறிஞராக திகழும் தமிழ் நேசன் அடிகளார் பத்துக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார்.

பல தேசிய, சர்வதேச தமிழ் மாநாடுகளில் பங்கேற்றுள்ளார். பல்வேறு நாடுகளில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். 2009 ஆம் ஆண்டு மன்னாரில் மன்னார் தமிழ்ச் சங்கத்தை நிறுவி அதன் தலைவராக இரண்டு தடவைகள் பணியாற்றியுள்ளார்.

2010 ஆம் ஆண்டு, நான்கு நாள் மன்னார் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையும், 2013 ஆம் ஆண்டு, மூன்று நாள் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவையும் மன்னாரில் பிரமாண்டமாக நடத்தி தேசிய சர்வதேச கவனத்தைப் பெற்றுக் கொண்டவர்.

# சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு கண் வில்லைகள் கையளிப்பு




(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு முதற்கட்டமாக ஒரு தொகை கண் வில்லைகள் கல்முனை மாநகர சபை முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபக தலைவருமான ரஹ்மத் மன்சூரால் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்து வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் டீ.பிரபா சங்கரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பவுண்டேஷன் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# புத்தளம் மாநகர சபைக்கு கதிரை சின்னத்தில் நப்ரா!

(எம். எச். எம். சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி கதிரை சின்னத்தில் களம் இறங்கும் நிலையில் புத்தளம் மாநகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனுவில் கையொப்பம் இடும் நிகழ்வு புத்தளத்தில் இடம்பெற்றது.

அதன்படி புத்தளம் மாநகர சபையில் ஏழாம் வட்டாரத்தில் புத்தளம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் கதிரை சின்னத்தில் புதிதாகக் களம் இறங்கியுள்ள சிவில் பாதுகாப்பு அமைப்பின் உப தலைவியும், மகளிர் சங்க முன்னாள் தலைவியும் சமூகசேவகியுமான எம்.டீ.எப் நப்ரா கையொப்பம் இட்டுள்ளார்.



# அம்பாறை மாவட்டத்தில் கட்டுப்பணம் செலுத்திய மயில்!

(நூருல் ஹுதா உமர்)

2025 இல் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி மயில் சின்னத்தில் அம்பாறை மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடுவதற்காக ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கட்டுப் பணம் செலுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிரின் தலைமையில் கட்டுப்பணம் செலுத் தப்பட்டது.



# கிழக்கின் சாதனை மாணவி ஜினோதிகாவுக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் நேரில் வாழ்த்து!

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தின் சாதனை மாணவி சிவரூபன் ஜினோதிகாவுக்குச் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் நேரில் சென்று பொன்னாடை போர்த்தி வாழ்த்துத் தெரிவித்தார்.

இலங்கை தேசிய கனிஷ்ட இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டியில் கலந்து கொண்டு மூன்றாம் இடம்பெற்று வெண்கல பதக்கத்தைப் பெற்ற சம்மாந்துறை வலய மல்வத்தை விபுலானந்த தேசிய பாடசாலை மாணவி சிவரூபன் ஜினோதிகாவே இவ்வாறு பாராட்டு பெற்றவராவார்.

இந்த நிகழ்வு வெள்ளிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில், சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர், எஸ். மகேந்திரகுமாருடன், பிரதிக் கல்வி பணிப்பாளர்களான பி. பரமதயாளன் , எம்.ஏ.எம்.சியாத், விஞ்ஞான பாட வளவாளர் ரி.எல்.றயிஸ்டீன் ஆகியோர் நேரில் சென்று பாராட்டிக் கௌரவித்தனர்.

மாணவி சிவரூபன் ஜினோதிகா ஏலவே தேசிய கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளிலும் சாதனை படைத்து பதக்கங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# உப்புவெளி கமநல சேவைகள் நிலையத்தின் இப்தார் நிகழ்வு!

(எஸ்.எம்.முபீன், அபு அலா )

திருகோணமலை – உப்புவெளி கமநல சேவைகள் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு உப்புவெளி கமநல சேவைகள் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் து.தர்சானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக கமநல சேவைகள் குழுத்தலைவர் சி.சிவராசா கலந்து கொண்டார்.

இதில் கப்பல்துறை கமக்கார அமைப்பு, முத்துநகர் கமக்கார அமைப்பு, தகரவெட்டுவான் கமக்கார அமைப்பு, மத்தியவெளி கமக்கார அமைப்பு, ஆண்டாங்குளம் கமக்கார போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.




# சர்வதேச மகளிர் தினம் நிகழ்வில் கௌரவமும், உதவி வழங்கலும்

(எஸ்.எம்.முபின், அபு அலா)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை காந்திநகர் மகளிர் அபிவிருத்தி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வு நேற்று (16) திருகோணமலை காந்திநகர் பாலர் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

மகளிர் சங்கத் தலைவி திருமதி சசிகலா தேவி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு காந்திநகர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கார்மேகம் காசிநாதன் பிரதம அதிதியாகவும், காந்திநகர் எச். எவ். சி. அருட்தந்தை நிருஷன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி டிலோகா லசந்தி பொன்சேகா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இதன்போது கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 6ஏ இற்கு மேற்பட்ட சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுப் பொதிகளும் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டன. தற்போது க.பொ.த. உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டது.

இந்தமுறை வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

குறிப்பாக அரச உதவிகள் மற்றும் வெளிநாட்டு உதவிகள் எதுவும் பெறாமல் மிக வறுமைக்கோட்டின் கீழ் காந்தி நகர் கிராமத்தில் பெண்கள் தலைமை தாங்கி வாழ்ந்து வருகின்ற 20 குடும்பங்களுக்கு அரிசிப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.









# 'பட்ஜெட்'டின் இரண்டாவது வாசிப்பில் சொல்லப்பட்ட வாக்குறுதிகள் எங்கே?

**மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் போராட்டம்**

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் இன்று திங்கட்கிழமை (17) மதியம் ஒரு மணிநேர அடையாள பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

தங்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவுகளை உரிய முறையில் வழங்கக் கோரியும் –

5 வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் பதவி உயர்வை 10 வருடங்களுக்கு ஒருமுறை மாற்றியுள்ளனர்.

இதனை கண்டித்தும் – இன்று தினம் திங்கட்கிழமை (17) நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளின் தாதியர்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அதற்கு அமைவாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட தாதிய உத்தியோகத்தர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'பட்ஜெட்'டின் இரண்டாவது வாசிப்பு முடிந்த போதும் சொல்லப்பட்ட வாக்குறுதி எங்கே? என்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பாதிக்கப்படாத வகையில் அமைதியான முறையில் மதியம் 12 மணி முதல் ஒரு மணிவரை தமது கோரிக்கைகளை முன்வைத்து தாதிய உத்தியோகத்தர்கள் போராட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.





# மறைமுக போரில் ஈடுபடுகிறது பாகிஸ்தான்: பிரதமர் நரேந்திர மோடி குற்றஞ்சாட்டுகிறார்

பாகிஸ்தான் அமைதியை விரும்பவில்லை என்றும் அந்த நாடு மறைமுக போரில் ஈடுபட்டு வருகிறது எனவும் பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த லெக்ஸ் பிரிட்மேன் ( வயது 41), பிரபல கணினி விஞ்ஞானி ஆவார். கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் பல்வேறு துறை சார்ந்த பிரபலங்களை அவர் நேர்காணல் செய்து சமூக வலைதளங்களில் வெளியிட்டு வருகிறார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, தொழிலதிபர் எலான் மஸ்க், பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜூக்கர்பெர்க், அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் உள்ளிட்டோரை லெக்ஸ் பிரிட்மேன் பேட்டி எடுத்துள்ளார்.

இந்த வரிசையில் பிரதமர் நரேந்திர மோடி உடனான அவரது நேர்காணல் நேற்று சமூக வலைதளத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. அப்போது பிரதமர் மோடி தெரிவிக்கையில்,

“இந்தியாவின் மத சம்பிரதாயங்கள், வாழ்வியல் கலை சார்ந்தது ஆகும். இந்து மதம் குறித்து எங்களது உச்ச நீதிமன்றம் தெளிவான விளக்கத்தை அளித்திருக்கிறது. அதாவது இந்து மதம் என்பது வழிபாடு மட்டும் கிடையாது. இது வாழ்வியல் கலை.



உடல், மனம், ஆன்மாவை உச்ச நிலைக்கு கொண்டு செல்ல விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது.

பசுக்களை பாதுகாக்க மகாத்மா காந்தி விரும்பினார். அதற்காக ஓர் இயக்கம் நடத்தப்பட்டது. நாடு முழுவதும் ஒருநாள் விரதம் கடைப்பிடிக்கப்பட்டது. அப்போது நான் பள்ளி சிறுவன். பசுக்களின் பாதுகாப்புக்காக முதல்முறையாக விரதம் இருந்தேன். அப்போதுதான் முதல்முறையாக விரதத்தின் மகிமையை உணர்ந்தேன்.

கடந்த 2014 ஆம் ஆண்டில் இந்திய பிரதமராக பதவியேற்றேன். பதவியேற்பு விழாவில் பங்கேற்க அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபுக்கு அழைப்பு விடுத்தேன். இதன்பிறகு இரு நாடுகளுக்கும் இடையே புதிய அத்தியாயம் தொடங்கும் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால் என்னுடைய அமைதி முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. பாகிஸ்தான் அமைதியை விரும்பவில்லை. அந்த நாடு மறைமுக போரில் ஈடுபடுகிறது. ஆனால் பாகிஸ்தான் மக்கள் அமைதியை விரும்புகின்றனர். தீவிரவாதம், உள்நாட்டு குழப்பங்களால் அவர்கள் விரக்தி அடைந்துள்ளனர். நிச்சயம் ஒருநாள் பாகிஸ்தான், அமைதி பாதைக்கு திரும்பும்.

கடந்த 2002 ஆம் ஆண்டு பிப்ரவரியில் குஜராத் கலவரம் நடைபெற்றது. அது துயரம் நிறைந்த சம்பவம் ஆகும். அந்த கலவரத்துக்கு பிறகு குஜராத்தில் கலவரம் நடைபெறவில்லை. மாநிலத்தில் நிரந்தரமாக அமைதி திரும்பி உள்ளது. கடந்த 2002 ஆம் ஆண்டுக்கு முன்பு குஜராத்தில் சுமார் 250 கலவரங்கள் நடைபெற்றுள்ளன. கடந்த 1969 இல் நடைபெற்ற கலவரம் 6 மாதங்கள் வரை நீடித்தது.

சீனா, இந்தியா இடையே சுமுக உறவு நீடிக்கிறது. இந்த உறவு வருங்காலத்தில் வலுவடையும் என்று நம்புகிறேன். இரு நாடுகளின் எல்லையில் இயல்பு நிலை திரும்பி உள்ளது. எல்லையில் கடந்த 2020 ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலையை கொண்டு வர இருதரப்பும் இணைந்து பணியாற்றி வருகிறோம். இருதரப்பிலும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. 21 ஆம் நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டு ஆகும். இந்த நூற்றாண்டில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே போட்டி நிலவுகிறது. மோதல் நிலவவில்லை.” - என்றார்.




# மருத்துவமனையில் தீ விபத்து; 190 நோயாளிகள் பத்திரமாக மீட்பு

மத்திய பிரதேச மாநிலம் குவாலியரில் உள்ள அரசு மருத்துவமனையில் நேற்று திடீரென தீவிபத்து ஏற்பட்டது. இதன்போது, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 190 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இதுகுறித்து அம்மாநில மக்கள் தொடர்பு துறை வெளியிட்ட அறிக்கையில், குவாலியர் கம்ல ராஜா அரசு மருத்துவமனையில் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 1 மணியளவில் மகப்பேறு துறையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் (ஐ.சி.யு) உள்ள ஏசி பகுதியில் திடீரென தீப்பிடித்தது.

இதையடுத்து புகைமூட்டம் அதிகமானதையடுத்து, ஐ.சி.யுவில் சிகிச்சைப் பெற்று வந்த 13 பேர் உட்பட 190 இற்க்கும் மேற்பட்ட நோயாளிகள் பாதுகாவலர்களால் பத்திரமாக மீட்கப்பட்டு வேறு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பின்னர் தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். முதல் கட்ட விசாரணையில் இந்த தீவிபத்துக்கு மின் கசிவு காரணமாக இருக்கலாம் என்பது தெரியவந்துள்ளது. இருப்பினும், இந்த சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.





# அடுக்குமாடி குடியிருப்பில் இடம்பெற்ற வெடிகுண்டு விபத்தில் சிக்கி 16 பேர் பலி

சிரியாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் சிக்கி 16 உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன .

கடந்த 10 வருடங்களாக சிரியாவில் உள்நாட்டு பேர் நடைபெற்று வந்தது .

இந்நிலையில், சிரியாவின் முன்னாள் ஜனாதிபதி பஷார் அல் அசாத் தலைமையிலான ஆட்சி அகற்றப்பட்டு புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டார்.

உள்நாட்டு போரின்போது பயன்படுத்தப்பட்ட பல வெடிகுண்டுகள் வெடிக்காமல் பூமிக்குள் புதைந்து உள்ளன.

கடந்த டிசம்பரில் பஷார் அல் அசாத் தலைமையிலான ஆட்சி கவிழ்ந்தபின் சிரியாவின் பல்வேறு பகுதிகளில் வெடிக்காமல் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 1,500 வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்க செய்யப்பட்டன.

இந்நிலையில், சிரியாவின் லடாகியா நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்று வெடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், அடுக்குமாடி குடியிருப்பின் மேல் தளத்தில் வசித்து வந்த பலர் வெடிவிபத்தால் ஏற்பட்ட இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர்.

இச்சம்பவத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## ட்ரம்ப் - புட்டின் இடையே நாளை விசேட சந்திப்பு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமர் புட்டினுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நாளை நடைபெறவுள்ளது. இந்த சந்திப்பு தொடர்பில் டொனால்ட் ட்ரம்ப் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

உக்ரைன் -ரஷ்யப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நிலைப்பாட்டுடன் இந்த பேச்சுவார்த்தையை முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.








# பாகிஸ்தானின் பாதுகாப்பு படையினர் மீது தற்கொலை குண்டு தாக்குதல்; 5 பேர் பலி

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் கடந்த வாரம் ரயில் கடத்தலில் ஈடுபட்ட பலுச் விடுதலை படையினர், நேற்று பாகிஸ்தானின் பாதுகாப்புப் படையினர் சென்ற இராணுவ வாகனத்தின் மீது தற்கொலை தாக்குதல் நடத்தியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். 10 பேர் காயமடைந்துள்ளனர்

இந்த தாக்குதல் தொடர்பான பரபரப்பூட்டும் காணொலியை பலுச் விடுதலை படையினர் தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனடா முரசு

பக்கங்கள் 03

திங்கட்கிழமை 17.03.2025

## வாகனக் கொள்ளையில் ஈடுபட்ட 8 பேர் கைது

ஹாமில்டன் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை இரண்டு இடங்களில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் 8 பேர் கைது செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கையில் மூன்று துப்பாக்கிகள், பாரியளவு 02



# ட்ரம்பிற்கு எதிராக ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பு விடுக்கிறார் கனடா பிரதமர் கார்னி

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை ஒருங்கிணைந்து எதிர் கொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகளுக்கு கனடா பிரதமர் மார்க் கார்னி அழைப்பு விடுத்துள்ளார்.**

**கனடா புதிய பிரதமராக பொருளாதார நிபுணரும் அந்த நாட்டு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநருமான மார்க் கார்னி கடந்த வெள்ளிக்கிழமை பொறுப் பேற்றார்.**

பாரீஸ், லண்டனுக்கு அவர் இன்று திங்கள்கிழமை (மார்ச் 17) பயணம் மேற்கொண்டு பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோன், பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர், பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்லஸ் ஆகியோரைச் சந்திக்க இருக்கிறார். கனடா பிரதமராக பொறுப்பேற்ற பிறகு அவர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

இது தொடர்பாக மார்க் கார்னி தெரிவிக்கையில்,

"கனடாவின் இறையாண்மைக் குட்ரம்ப் மதிப்பளித்தால் அவரைச் சந்திக்கவும் தயாராக இருக்கிறேன். எனினும், இப்போதைய சூழலில் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்ளும் திட்டம் ஏதுமில்லை.

ட்ரம்ப் விரைவில் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவார் என நம்புகிறேன். கனடாவின் பொருளாதாரத்தின் மீது மட்டுமன்றி இறையாண்மை மீதும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தாக்குதல் நடத்தியுள்ளார். அவரை எதிர்கொள்ள கனடாவுடன் ஐரோப்பிய நாடுகள் கைகோர்க்க வேண்டும்." என்றார்.

# வாடகை கார் சாரதியை கடத்திய ஒருவர் கைது

டொரோண்டோவில் கடந்த கோடைகாலத்தில் வாடகை கார் சாரதி ஒருவரை கடத்தி, அவரை திருடப்பட்ட ஒரு வாகனத்தை மீட்க கட்டாயப்படுத்திய குற்றச்சாட்டில் ஒரு இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டாவது சந்தேகநபர் இன்னும் தேடப்பட்டு வருகிறார். கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி ஈஸ்ட் லிபர்ட்டி East Liberty Street மற்றும் ஹானா எவன்யூ Hanna Avenue பகுதியில் இந்த கடத்தல் சம்பவம் இடம்பெற்றதாக டொரோண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவம் 'ரைட்ஷேர்' வாகனத்தில் இருந்தபோது துப்பாக்கியை காண்பித்து, சாரதியைமிரட்டியுள்ளனர்.

வாகனத்தை ஒரு தெரியாத ஓர் இடத்திற்கு கொண்டு சென்று, அவரை திருடப்பட்ட வாகனத்தை மீட்க கட்டாயப்படுத்தியுள்ளனர்.

அதன் பின்னர் திருடப்பட்ட வாகனத்தில் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

தடயங்களின் அடிப்படையில் ஒரு இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். 21 வயதான ஜோர்டன் பூட்ரம் என்பவர் இன்னும் தேடப்பட்டு வருகிறார் ன தெரிவிக்கப்படுகின்றது.







# அமெரிக்க பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கனடிய தொழிலதிபர் ஜாஸ்மின் மூனி வான்கூவார் திரும்பினார்

கடந்த 12 நாள்கள் அமெரிக்க பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கனடிய தொழிலதிபர் ஜாஸ்மின் மூனி மீண்டும் வான்கூவாருக்கு திரும்பியுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி அமெரிக்கா-மெக்சிகோ எல்லையில் வீசா பெற்றுக் கொள்ள முயன்ற போது அவர் கைது செய்யப்பட்டார் என கூறப்படுகிறது.

இந்த நிலையில், அவர் வான் கூவார் விமான நிலையத்தில் தரையிறங்கினார். இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“இன்னும் முழுமையாக எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

பல நாள்கள் தூங்கவில்லை, சரியான உணவும் சாப்பிடவில்லை” என மூனி கனடிய ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

தம்மை ஏன் கைது செய்தார்கள் என்பதற்கான தகவல்களை எந்த அதிகாரிகளும் வழங்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

“என்ன நடக்கிறது என்றே எனக்கே தெரியாது. நண்பர்கள், குடும்பத்தினர், ஊடகங்கள் எனக்கு ஆதரவாக இருந்ததனால் தான் இப்போது வீட்டிற்கு வந்துள்ளேன் என்று நினைக்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

மூனி ஏற்கனவே ஒரு அமெரிக்க வீசாவை ரத்து செய்ததனை ஒப்புக் கொண்டுள்ளார்.

எனினும் புதிய வேலை வாய்ப்பு கிடைத்ததால், புதிய வீசா பெற்றுக் கொள்வதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடாவை தனதாக்கி விடுவதாக மிரட்டல் விடுத்துள்ள நிலையில், மூனியின் சம்பவம் கனடியர்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.







## வாகனக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப்பொருள்கள், திருடப்பட்ட வாகனங்கள் மற்றும் போலி நாணயத் தாள் கைப்பற்றப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹாமில்டன் போதைப்பொருள் மற்றும் கும்பல் தடுப்பு பிரிவு மற்றும் சில பொலிஸ் பிரிவுகள் கூட்டாக இணைந்து இந்த தேடுதல் வேட்டையை மேற்கொண்டன என தெரிவிக்கப்படுகின்றது.

சேல்பி அவென்யூ மற்றும் ஜேம்ஸ் ஸ்டிரீட் நார்த் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் பல்வேறு பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு தயார் நிலையில் தோட்டாக்கள் ஏற்றப்பட்டிருந்த மூன்று துப்பாக்கிகள், 500 கிராம் ஃபென்டனைல், 648 கிராம் மெத்தாம்பெட்டமைன், 120 கிராம் கோகெயின், 70 மயக்க மருந்து மாத்திரைகள், திருடப்பட்ட 2 வாகனங்கள் மற்றும் 1600 டொலர் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மைக்கேல் கேசி (40 வயது), பிராட்லி மார்க் (43 வயது), ஷானன் பேட்சுலர் (39 வயது), ஜூலியன் ஜெசோ (28 வயது), பிராண்டன் ஃப்ரோய்ஸ் (28 வயது), ஜெம்மா ரொஜர்ஸ் (21 வயது), மையா பார்டி (24 வயது) மற்றும் ஜேக்கப் பொய்ட் (23 வயது) ஆகிய 8 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# அமெரிக்க தேசிய கொடிகளை அகற்றும் மிசிசாகா நகரம்: மேயர் பாரிஷ் விளக்கம்

கனடாவின் மிசிசாகா நகரம் பல பொது இடங்களில் காணப்பட்ட அமெரிக்க தேசிய கொடிகளை அகற்றும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இது பலரின் கோரிக்கையின் அடிப்படையில் செய்யப்பட்டதாக நகர மேயர் கேரோலின் பாரிஷ் தெரிவித்தார்.

மேயர் பாரிஷ் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட தகவலில், விளையாட்டு அரங்குகள், ஒன்டாரியோ ஏரிக்கு அண்மித்த இடங்கள் மற்றும் Port Credit பகுதியில் உள்ள Snug Harbour பியர் ஆகிய இடங்களில் அமெரிக்க கொடிகள் அகற்றப்பட்டன என தெரிவித்தார்.

மேலும், பெரிய கனேடிய கொடிகள் வாங்கப்படவுள்ளன. அவை நகர மன்றம் கொடி தூண்களில் நிறுவப்படும் என்றும் கூறினார்.

இந்த முடிவு, அமெரிக்கா மற்றும் கனடாவுக்கு இடையிலான வர்த்தக போரின் பின்னணியில் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடாவுக்கு எதிராக கடுமையான வரிகளை விதித்து வருகின்றார்.

இதன் பாதிப்பு, மிசிசாகா நகரத்தில் 6 லட்சம் வேலை வாய்ப்புகளை இழக்கும் அபாயத்தை உருவாக்கியுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மிசிசாகா ஒரு தொழில்துறை மற்றும் வர்த்தக மையமாக உள்ளதால், இந்த வரிகள் மிகப்பெரிய பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும் என பாரிஷ் எச்சரித்தார்.

அமெரிக்கா அல்லாத மற்றும் கனேடிய உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்க வகையில் கொள் முதல் நடைமுறையில் நகர நிர்வாகம் திருத்தம் செய்துள்ளது.

அமெரிக்க சந்தையை தவிர்த்து புதிய சர்வதேச சந்தைகளை உருவாக்க நகரம் ஆதரவு அளிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய முதலீடுகளை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என மிசிசாகா நகர மேயர் பாரிஷ் அறிவித்துள்ளார்.

